



# யா/மண்டைதீவு றோ.க.வித்தியாலயம்

# பரிசளிப்பு விழா 2017

## 02.08.2017


யா/மண்டைதீவு றோ.க.வித்தியாலயம்
J/MANDA[...]IDYALAYAM
இது எமது பாட்டன் முப்பாட்டன் பாடசாலை
இதை வளர்ப்பது
பழைய மாணவர்களாகிய எமது கடமை
புனித பேதுருவானவர் கல்விக்குழு, மண்டைதீவு.

# நிகழ்ச்சி நிரல்

* பிரதம விருந்தினரை பாண்ட் வாத்திய இசையுடன் அழைத்து வருதல்.
* தேசியக்கொடியேற்றலும் தேசிய கீதம் இசைத்தலும்.
* பாடசாலைக் கொடியேற்றலும் கீதம் இசைத்தலும்.
* மங்கல விளக்கேற்றல்.
* இறைவணக்கம்
* வரவேற்பு நடனம்
* வரவேற்புரை
* ஆசியுரை
* அதிபர் அறிக்கை
* பரிசில்கள் வழங்கல்
* கலை நிகழ்வுகள்
* கௌரவ விருந்தினர் உரை
* கலை நிகழ்வுகள்
* சிறப்பு விருந்தினர் உரை
* கலை நிகழ்வுகள்
* நன்றியுரை
* தமிழ்த்தாய் வாழ்த்து

# தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வானமளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ் மொழியே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!

# யா/ மண்டைதீவு றோ.க. வித்தியாலயம்

## பரிசளிப்பு விழா 2017

### 2017 ஆவணி 02, மாலை 5.00 மணி

**தலைமை**

திரு. அ. யோன் கொலின்

(அதிபர், யா/மண்டைதீவு றோ.க. வித்தியாலயம்.)

பிரதம விருந்தினர்

கௌரவ என். விந்தன் கனகரட்ணம்

(யாழ். வட மாகாணசபை உறுப்பினர்)

அதிபர்,

ஆசிரியர்கள், மாணவர்கள்.

# யா/ மண்டைதீவு றோ.க. வித்தியாலயம்

## மகுட வாசகம்

**முயற்சி உயர்ச்சி தரும்**

## பாடசாலையின் நோக்கக் கூற்று

**நவீனத்துடத்துடன் இணைந்து முழுமைத் தேர்ச்சி கொண்ட ஒரு சமூகத்தை உருவாக்குவோம்.**

## பணிக்கூற்று

**தேசிய இலக்குகளின் அடிப்படையில் வளங்களின் உச்ச பயனை உபயோகித்து மனிதன் எதிர்நோக்கும் சவால்க ளுக்கு முகம் கொடுத்து. ஜதார்த்த உலகில் நடைபோடு வதற்காக சீரிய விழுமியப் பண்புகள் நிறைந்த கல்வியை வளங்கி பாடசாலை பண்புசார் விருத்திக்காக உழைத்தல்.**

# ஆசியுரை



2017ஆம் ஆண்டு என்பது எமது பாடசாலையின் வரலாற்றில் பொன் எழுத்துக் களால் பொறிக்கப்பட வேண்டிய ஆண்டாகும். இறையருள் நம் பாதுகாவலராகிய புனித பேதுருவானவரின் பரிந்துரையால் எம் பாடசாலையில் பெருகியுள் ளது. இந்த ஆண்டில் எமது பாடசாலை இரண்டாம் தரப் பாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. தரம் - 06 இனை இந்த வருடம் ஆரம்பித்து, ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு வகுப்பாக 2022 இல் G.C.E. O/L ஆரம்பிக்கப்படும். இது எம் பிள்ளைகளுக்கு மிகப் பெரும் இறையருள் ஆகும். இன்னும் இந்த ஆண்டில் இரண்டு இடங்களில் இயங்கிய பாடசாலை ஒரு கட்டடத்தில் இயங்கத் தொடங்குகின்றது. இங்கு எம் பங்கு மக்கள் பெரும் தன்மையோடு ஆலயத்திற்குச் சொந்தமான காணியைப் பாடசாலைக்குக் கொடுத்து இந்தப் பாடசாலை ஒரே காணியில் இயங்கத் துணை புரிந்துள்ளார்கள். இவ்வாறு தரிசன நோக்கோடு இந்தக் காணியை வழங்க முன் வந்த ஆலய நிர்வாகத்தினருக்கும் பங்கு மக்களுக்கும் எனது நன்றிகளும் பாராட்டுக்களும்.

மேலும் இந்த ஆண்டு எமது பாடசாலைக்கு இந்திய துணைத் தூதரகத்தின் அனுசரணையுடன் இந்திய மத்திய அரசினால் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், இளைஞர் விவகார அமைச்சுக்கு வழங்கப்பட்ட நிதி உதவியில் இருந்து ரூபா 80 இலட்சத்தில் ஒரு ஒருமாடிக் கட்டடத்திற்கான அத்திவாரம் இடப்பட்டுள்ளது. இதுவும் இறைவனின் அதிசயமும் அற்புதமுமே. எனவே பெருந்தன்மையோடு இந்த புதிய கட்டடத்திற்கு நிதி உதவி வழங்கிய இந்திய மக்களுக்கு எனது மனமார்ந்தநன்றிகள்.

"கல்வியே மிகச் சிறந்த மூலதனம்" என்று கடந்த சில வாரங்களாக எம் பங்கில் விழிப்புணர்வு மறையுரைகளை வழங்கினேன். சில பதாதைகளை வெளியே வைத்தோம். இன்று அந்த விழிப்புணர்வு மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது மனதுக்கு மகிழ்வு தருகின்றது. எப்போதும் எமது பிள்ளைகளின் கல்விக்கு வெளிநாடுகளில் உள்ள எமது பங்கு மக்களின் உதவிகளைக் கேட்டு நிற்கமுடியாது. அவர்களும் மிகவும் கஸ்ரப்பட்டு உழைத்து பலவற்றைத் தியாகம் செய்தே இந்தப் பணத்தை எமது பிள்ளைக ளின் கல்விக்கு அனுப்புகின்றனர். எனவே எமது பிள்ளைகளின் கல்விக்கு, பாடசாலை வளர்ச்சிக்கான ஓர் நிதியை நாங்கள் உருவாக்க வேண்டும். இதற்காக புனித பேதுருவானவர் கல்விக் குழு (St. Peter`s Education Committee) வை உருவாக்கியுள் ளோம். மேலும் கொமர்ஷல் வங்கியில் புனித பேதுருவானவர் கல்வி நிதி (St. Peter`s Education Fund) என்ற ஓர் கணக்கையும் ஆரம்பித்துள்ளோம். இந்த கல்வி நிதிக்கான கணக்கு இலக்கம் 8060134076 என்பதாகும்.

இந்த ஆண்டு ஆவணி இரண்டாம் நாள் எமது பாதுகாவலரின் திருநாள் கலை நிகழ்வோடு பாடசாலையின் பரிசளிப்பு நிகழ்வில் கல்விக்கான ஓர் நிரந்தர நிதியைத் ஆரம்பிக்க உள்ளேன். இதில் சேகரிக்கப்படும் நிதி நிரந்தரமான நிதியாக வங்கியில் வைப்பிலிடப்பட்டு, அதில் வரும் வட்டியில் இருந்து எமது பாடசாலையின் வளர்ச்சிக்கும், பிள்ளைகளின் பிரத்தியேக வகுப்புகளுக்கும் பயன்படுத்தக் கூடியவகையில் நிதியைச் சேகரிக்க வேண்டியுள்ளது. எனது இலக்கு 50 இலட்சம். இது எனது ஒரு பெரிய கனவே. ஆனால் இந்தியாவில் ஏழையாகப் பிறந்து இந்தியாவின் உயர் குடிமகனாகிய பெருமதிப்புக்குரிய அப்துல் கலாம் "கனவுகாணுங்கள்" என்று எப்போதும் கூறுவார். கனவு காண்போம். எமது பாதுகாவலரின் பரிந்துரையோடு இக் கனவு விரைவில் நிறைவேறும்.

இதற்கு உள்ளூர் மக்களின் பங்களிப்பும் புலம்பெயர் பங்கு மக்களின் பங்களிப்பும் மிகவும் தேவையாக உள்ளது. எனவே எமது வீடுகளின் விசேட நிகழ்வுகளின் போது இந்த நிதிக்கு பங்களிப்பு செய்வோம். இறந்தவர்களின் நினைவுகள் எப்போதும் வாழ இந்த நிதிக்கு பங்களிப்புச் செய்வோம். இன்னும் எமது பிறந்த தினங்களின் கொண்டாட்டங்களின் போது இறையருள் பெறும் வாயிலாக இந்த நிதிக்கு பங்களிப்பு செய்வோம்.

அறிவும் ஆற்றலும் நிறைந்த எமது பிள்ளைகளின் எதிர்காலம் வளம் பெற பாடசாலையை வளர்ப்போம். என் குருத்துவப் பார்வையில் ஆலயமும் பாடசாலையும் திருச்சபையின் இரு கண்கள். இரண்டும் சமாந்தரமாகப் பயணிக்கும் போது கிராமம் வளரும். எனவே தொடர்ந்தும் எமது பாடசாலை வளர்ச்சிக்கு தோள் கொடுப்போம். எம் பிள்ளைகளை வளர்ப்போம்.

இறுதியாக எமது பாடசாலைக்கு, எம் பிள்ளைகளின் கல்விக்கு உதவி செய்த அனைத்து புலம்பெயர் வாழ் எம் பங்கு மக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். ஒவ்வொரு வருடமும் உங்கள் கிராமத்தை மறவாது, பெருநாளுக்கு வருவது எனக்கு உற்சாகமூட்டுகின்றது. உங்கள் அன்பை என்றும் மறவோம். என்றும் உங்களையும் உங்கள் குடும்பங்களையும் எம் நாளாந்த திருப்பலிகளில் நினைவு கூருவோம்.

நன்றி.

மனுவேற்பிள்ளை டேவிட்,
தீவகமறைக்கோட்ட குரு முதல்வரும்,
மண்டைதீவு-அல்லைப்பிட்டி பங்குத்தந்தையும்.

**யா/மண்டைதீவு றோ.க.வித்தியாலயம்**

**எம்மை வளர்த்த அறிவாலயத்தை**
**நாம் வளர்ப்பது எமது கடமை**

புனித பேதுருவானவர் கல்விக்குழு, மண்டைதீவு.

## யா/ மண்டைதீவு றோ.க. வித்தியாலய குடும்பம்



யா/ மண்டைதீவு றோ.க. வித்தியாலய
தரம் - 01 மாணவர்கள், அதிபர், பொறுப்பாசிரியர்.



யா/ மண்டைதீவு றோ.க. வித்தியாலய
தரம் - 02 மாணவர்கள், அதிபர், பொறுப்பாசிரியர்.



யா/ மண்டைதீவு றோ.க. வித்தியாலய
தரம் - 03 மாணவர்கள், அதிபர், பொறுப்பாசிரியர்.



யா/ மண்டைதீவு றோ.க. வித்தியாலய

தரம் - 04 மாணவர்கள், அதிபர், பொறுப்பாசிரியர்.



யா/ மண்டைதீவு றோ.க. வித்தியாலய
தரம் - 05 மாணவர்கள், அதிபர், பொறுப்பாசிரியர்.



யா/ மண்டைதீவு றோ.க. வித்தியாலய
தரம் - 06 மாணவர்கள், அதிபர், பொறுப்பாசிரியர்.



யா/ மண்டைதீவு றோ.க. வித்தியாலயம்
4 X 50 அஞ்சல் போட்டியில் மாகாண மட்டத்திற்கு தெரிவானோர்.



# யா/மண்டைதீவு றோ.க. வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா 2017

**பரிசளிப்பு விழாவின் நோக்கம்**

எமது பாடசாலையில் கல்வி கற்றுக்கொண்டிருக்கும் மாணவர்களின் அறிவு, ஆற்றல், திறனை வெளிக்கொண்டுவரும் முகமாக நடாத்தப்படுகின்ற பரீட்சைகள், போட்டிகள், இணைப் பாடவிதானச் செயற்பாடுகள் போன்றவற்றில் வெற்றி பெறுகின்ற மாணவர்களை ஊக்கப்படுத்தும் முகமாக பரிசளிப்பு நிகழ்வு இன்று நடைபெறுகின்றது.

**கடந்த கால கல்விச் செயற்பாடுகள்**

கடந்த ஆண்டு 04.01.2016 இல் கல்விச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப் பட்டதில் இருந்து பல்வேறு செயற்பாடுகள் பாடசாலையில் முன்னெடுக்கப் பட்டது. அவற்றைச் சுருக்கமாகக் குறிப்பிட முனைகின் றேன்.

2016 இல் புதிதாக தரம் - 01 இல் இணைந்த மாணவர்களை வரவேற்பதற்கான கால்கோள் விழா தரம் - 02 மாணவர்களால் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது. 14.01.2016 அன்று அருட்பணி மனுவேற்பிள்ளை டேவிட் அடிகளாரால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, தரம் - 02 மாணவர்களால் பூச்செண்டு கொடுக்கப்பட்டு புதிய மாணவர்கள் வரவேற்கப்பட்டனர். தொடர்ந்து அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களால் தைப்பொங்கல் விழா முன்னெடுக்கப்பட்டது.

**இல்ல மெய் வல்லுனர் போட்டி**

இந்த கல்வி ஆண்டிற்கான எமது பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி 17.02.2016 இல் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணக் கல்வி வலய ஓய்வு நிலை பிரதிக் கல்விப்

பணிப்பாளர் திரு. பொ. அருணகிரிநாதன் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

## எமது மாணவர்களின் சாதனைகள்

தொடர்ந்து தமிழ் மொழித்தினப் போட்டிகள், ஆங்கில தினப் போட்டிகள், துரித கணிதம், சித்திரப் போட்டி, திருக்குறள், செயற்பட்டு மகிழ்வோம் சார்பான போட்டிகள் பாடசாலைகள் மட்டத்தில் நடாத்தப்பட்டு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் கோட்டம், வலயம், மாகாண மட்டப் போட்டிகளுக்குத் தெரிவுசெய்யப்பட்டார்கள். குறிப்பாக தரம் - 02இல் செல்வி அ. மேரி அன்ரனிற்றா துரித கணிதப் போட்டியில் கோட்ட மட்டத்தில் முதலாம் இடத்தினையும், செல்வி. றொ. றொமில்டா சித்திரப் போட்டியில் கோட்ட மட்டத்தில் முதலாம் இடத்தினையும், செல்வி. சே. மேரி அன்ரனிற்றா திருக்குறள் போட்டியில் கோட்ட மட்டத்தில் முதலாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டதுடன், தரம் - 03 இல் செல்வன் க. யேசுபாலன் ஆங்கில கவிதைப் போட்டியில் கோட்ட மட்டத்தில் முதலாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டார்.

மேலும் தரம் - 05 ற்கான பொது அறிவு குழுப் போட்டியில் எமது பாடசாலைக் குழு கோட்ட மட்டத்தில் முதலாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டது. ஆக்கத்திறன் செயற்பாட்டில் செல்வி. இ. சாணுஜா கோட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தையும், ஆங்கில வாசிப்புப் போட்டியில் செல்வி. இ. ஆஸ்லிலீடியா கோட்ட மட்டத்தில் மூன்றாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டனர். செயற்பட்டு மகிழ்வோம் போட்டியில் தரம் - 05 ற்கான குழு 2016 இல் கோட்ட மட்டத்தில் முதலாம் இடத்தினையும், வலய மட்டத்தில் மூன்றாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டது. தொடர்ந்து செயற்பட்டு மகிழ்வோம் போட்டியில் தரம் - 04 ற்கான அணி கோட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தினையும், தரம் - 03 ற்கான அணி கோட்ட மட்டத்தில் மூன்றாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. இப் போட்டிகள் அனைத்திற்கும் பொறுப்பாக

இருந்து செயற்பட்ட ஆசிரியர்கள் அனைவருக்கும் இத் தருணத்தில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். விசேடமாக விளையாட்டுக் குழுப் பொறுப்பாசிரியராக இருந்து செயற்பட்ட திரு. க. சண்முகநாதன் ஆசிரியருக்கு விசேட பாராட்டுக்கள்.

2017 ஆம் ஆண்டில் இதுவரை நடைபெற்ற போட்டிகளின் அடிப்படையில் செல்வி த. அனுஸ்ரிகா மெய்வல்லுநர் போட்டியில் 60 மீற்றர், 100 மீற்றர் போட்டிக்காக மாகாண மட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். 4X50 அஞ்சல் ஓட்டப் போட்டியில் 12 வயதின் கீழ் ஆண்கள், பெண்கள் அணியினர் எமது பாடசாலையில் இருந்து மாகாண மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டிருந்தனர். அத்துடன் தரம் -06 இல் இருந்து ஏழு மாணவர்கள் கணித ஒலிம்பியாட் போட்டிக்காக மாகாண மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். மேலும் செல்வி அ. சாஜுஜா சமூக விஞ்ஞான போட்டியில் மாகாண மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டார்.

இவ்வாண்டிலே விரைவு கணிதப் போட்டியில் தரம் - 03 இல் செல்வி சே. மேரி அன்ரனிற்றா கோட்ட மட்டத்தில் முதலாம் இடத்தினையும், வலய மட்டத்தில் இரண்டாம் இடத்தினையும் பெற்றுக்கொண்டார். ஆங்கில கவிதை கூறல் போட்டியில் தரம் - 03 செல்வன் ம. டிபோன்சன் இரண்டாம் இடத்தினையும், ஆங்கில வாசிப்புப் போட்டியில் கோட்ட மட்டத்தில் தரம் - 06 இல் செல்வி இ. ஆஸ்லிலீடியா மூன்றாம் இடத்தினையும், தரம் - 04 இல் செல்வன் சூ. கபிலன் இரண்டாம் இடத்தினையும், தரம் - 02 இல் செல்வி அ. தீபிகா இரண்டாம் இடத்தினையும், ஆங்கில எழுத்துப் போட்டியில் கோட்டமட்டத்தில் தரம் - 05 இல் செல்வன் அமுதகென்றி இரண்டாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டனர்.

## புலமைப் பரிசில் பரீட்சையில் சாதனைகள்

ஆண்டுதோறும் நடைபெறுகின்ற தேசிய தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சையில் எமது பாடசாலை மாணவர்கள் கடந்த பல வருடங்களாக சித்தியடைந்து சாதனை படைத்து வருகின்றனர். 2016

ஆவணி மாதம் நடைபெற்ற பரீட்சையில் தோற்றிய 24 மாணவர்களில் 23 மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று பாடசாலை சித்தி 96 வீதமாக அமைந்து காணப்பட்டது. இவர்களில் இரண்டு மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்தனர். செல்வி அ. ஆன் பிறின்ரா 164 புள்ளிகள், செல்வன் கி. அபிஷன் - 158 புள்ளிகள். மேலும் 2015 ஆம் ஆண்டில் தரம் - 05 தேசிய புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய 13 மாணவர்களும் 70புள்ளிகளுக்கு மேல் பெற்று 100 வீத சித்தியையும், 03 மாணவர்கள் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்றும் (162,160,159) சித்தியடைந்திருந்தனர்.

இதே போன்று 2014 இல் 21 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி 19 மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று 90 வீத சித்தியையும், 05 மாணவர்கள் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்றும் சாதனை புரிந்தமையும் குறிப்பிடத்தக்கது. 2013 ஆம் ஆண்டில் 16 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி 16 மாணவர்களும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்து, 100 வீத சித்தியையும், 03 பேர் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்தனர். 2012 இல் 17 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி, 12 பேர் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று 70 வீத சித்தியையும் ஒரு மாணவர் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சாதனை படைத்தமையும் குறிப்பிடத்தக்கது.

இம் மாணவர்களை ஒவ்வொரு வகுப்புக்களிலும் கற்பித்த ஒவ்வொரு ஆசிரியர்களும் பெருமைக்குரியவர்களும் பாராட்டப்பட வேண்டியவர்களும் என்பதோடு எல்லாவற்றிற்கும் மகுடம் வைத்தாற் போல் தன்னுடைய நேரத்தை முழுமையாக அர்ப்பணித்து தரம் - 05 வகுப்பை கடந்த நான்கு வருடங்களாக பொறுப்பெடுத்து வெற்றிகரமாக அல்லும் பகலும் உழைத்த திருமதி கபிலராணி வசீகரன் ஆசிரியருக்கு எமது விசேட பாராட்டுக்கள். இவருடைய அர்ப்பணிப்பு மிக்க சேவையினைப் பாராட்டி 2016ஆம் ஆண்டிற்கான நல்லாசிரியர் விருதான "பிரதீபா பிரபா" விருது

மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களால் கொழும்பு தாமரைத் தடாக அரங்கில் வைத்து இவருக்கு வழங்கப்பட்டமை குறிப் பிடத்தக்கது.

**மறைக்கல்வி போட்டியில் சாதனைகள்**

ஆண்டு தோறும் ஒக்டோபர் மாதத்தில் மறைக்கல்வி நடுநிலையத்தினால் கத்தோலிக்க மாணவர்களுக்காக நடாத்தப்படும் மறைக்கல்வித் தேர்விலும் எம்முடைய மாணவர்கள் திறமை, விசேட, அதி விசேட சித்திகளைப் பெற்று வருகின்றமை குறிப்பிடத்ததக்கது. அந்த வகையில் 2016 ஆம் ஆண்டிற்கான தேர்வில் 80 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களாக தரம் - 03இல் செல்வி றொ. ரசில்டா 93 புள்ளிகள், செல்வி சூ. கலையினி 90 புள்ளிகள், செல்வன் த. கபிலன் - 86 புள்ளிகள், தரம் - 04 இல் செல்வன் சே. அன்பழகன் - 90 புள்ளிகள், செல்வன் க. ஜதுஷன் - 83 புள்ளிகள், செல்வி த. விேனோஜா 82 புள்ளிகள், செல்வி ஜெ. துசிதா 82 புள்ளிகள், செல்வன் த. அஞ்சிறிலவன் - 80 புள்ளிகள், தரம் - 05 இல் செல்வி அ. சாணுஜா -80 புள்ளிகள் எனப் பெற்றுள்ளனர். சமய பாடத்தைக் கற்பித்து, மறைக்கல்விப் பரீட்சைகளுக்கு மாணவர்களை ஆயத்தப்படுத்தும் திருமதி றோஸ்மலர் சேவியர் நவரட்ணம் ஆசிரியருக்கும் சமய பாடம் கற்பிக்கும் ஏனைய ஆசிரியர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

**ஆசிரியர் தினம்: அர்ப்பணிப்பு மிக்க எம் ஆசிரியர்களுக்கு நன்றிகள்**

மேலும் 2016 ஒக்டோபர் 06 ஆம் திகதி எமது பாடசாலையில் ஆசிரியர் தினம் வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. பங்குத் தந்தை அவர்களால் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, அதிபர் ஆசிரியர்களுக்கு மாலை அணிவிக்கப்பட்டு, பெற்றோர் களாலும் மாணவர்களாலும் வரவேற்கப்பட்டு, சிற்றுண்டி விருந்துடன் சிறிய கலைநிகழ்வும் நடைபெற்று ஆசிரியர்கள்

கௌரவிக்கப்பட்டனர். ஏணிப்படிகளாக இருந்து மாணவர்களின் முன்னேற்றத்திற்காக உழைத்த ஆசிரியர்களுக்கு பரிசில்களையும் வழங்கி மாணவர்கள் மகிழ்ந்தனர்.

### ஒளிவிழா

டிசெம்பர் மாதம் 02ஆம் திகதி எமது பாடசாலையின் ஒளிவிழா நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் உயர்திரு. கு. சரவணபவன் கலந்து சிறப்பித்தார். ஆசீயுரையினை பங்குத்தந்தை அருட்பணி மனுவேற்பிள்ளை டேவிட் அவர்கள் வழங்கினார். மாணவர்களின் கலை நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்றது. இந் நிகழ்வில் சிறப்புரை ஆற்றிய பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் உயர்திரு கு. சரவணபவன் அவர்கள் மாணவர்களின் திறமைகளை வியந்து பாராட்டியதுடன், பாடசாலையின் எதிர்கால வளர்ச்சிக்காக ரூபா இரண்டு இலட்சம் (200,000.00) நிதியை அன்பளிப்புச் செய்வதாகவும் உறுதி யளித்தார்.

2017 ஆண்டிற்காக எமது பாடசாலை விளையாட்டுப் போட்டியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ் மாவட்ட வட மாகாணசபை உறுப்பினர் கௌரவ என். விந்தன் கனகரட்ணம் அவர்கள் மாணவர்களின் திறமைகளைப் பாராட்டி, பாடசாலை அபிவிருத்திக்காக ரூபா இரண்டு இலட்சம் (200,000.00) நிதியை வழங்குவதாக் வாக்களித்திருந்தார். அந்த நிதி ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது என்பதனை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

### பாடசாலையின் பாரிய வளர்ச்சி

2016ஆம் ஆண்டு காலப்பகுதியில் எமது பாடசாலைகளினு டைய வளர்ச்சியைக் கண்ட தீவக வலயக் கல்வி அலுவலகமும், வலயக் கல்விப் பணிப்பாளரும், அண்மைய பாடசாலை சிறந்த

பாடசாலை செயற்திட்டத்தின் கீழ் ஒரு நீர் தாங்கி தொட்டியுடன் மூன்று மலசலகூடங்களை அமைப்பதற்காக 820,000.00 (எட்டு இலட்சத்து இருபது ஆயிரம்) மும் வகுப்பறை புனரமைப்புக்காக 220,000.00 (இரண்டு இலட்சத்து இருபது ஆயிரம் ) மும் ஒதுக்கப்பட்டிருந்தது. 'அத்துடன் வேலணைக் கோட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை என்ற அடிப்படையில் சிறுவர் விளையாட்டு முற்றம், மதில் அமைப்பதற்காக 725,000.00 (ஏழு இலட்சத்து இருபத்து ஐயாயிரம் ) மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. குறிப்பிடத்தக்கது.

**ஆறாம் ஆண்டு ஆரம்பம்**

இரண்டாயிரத்து பதினேழாம் (2017) ஆண்டு யா/மண்டைதீவு றோ.க. வித்தியாலயத்தைப் பொறுத்தவரை பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஓர் ஆண்டாகும். 1990 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட போர் சூழல் காரணமாக நிகழ்ந்த இடப்பெயர்வு பாடசாலைச் சொத்துகளுக்கு ஏற்பட்ட அழிவுகள் காரணமாக மீண்டும் 2003 ஆம் ஆண்டில் அதே இடத்தில் ஒரு சிறிய கட்டடத்தில் எமது பாடசாலை ஆரம்பப் பாடசாலையாக தரம் 01 தொடக்கம் தரம் 05 வரை ஓய்வு நிலை அதிபர் திரு.சேவியர்தாசன் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. எனினும் இன்று எமது பாடசாலை படிப்படியாக வளர்ச்சி பெற்று 2017 இல் தரம் - 06 புதிதாக ஆரம்பிக்கப்பட்டு, தரம் - 01 முதல் தரம் - 11 வரைஇயங்குவதற்கு வடக்கு மாகாண சபையால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அனுமதி பெற்றுக்கொள்வதற்காக அயராது உழைத்த வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான கௌரவ இம்மனுவேல் ஆர்னோல்ட், கௌரவ என். விந்தன் கனகரட்ணம் ஆகியோருக்கும், அப்போதைய வடக்கு மாகாண கல்வி அமைச்சராக இருந்த கௌரவ குருகுலராஜா அவர்களுக்கும் மற்றும் எமது பங்குத்தந்தை அருட்பணி மனுவேற்பிள்ளை டேவிற் அடிகளார், எமது பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் மற்றும்

உறுப்பினர்கள், பெற்றோர்கள் அனைவருக்கும் எமது பாராட்டுக்கள்.

**பாடசாலைக்கான புதிய கட்டடம்**

தொடர்ச்சியாக இவ்வாண்டில் (2017) இன்னுமொரு திருப்பு முனையாக யாழ். இந்திய துணைத் தூதரகத்தின் ஊடாக இந்திய மத்திய அரசாங்கத்தினால் வடக்கு மாகாண கல்வி பண் பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சுக்கு வழங்கப்பட்ட நிதியில் இருந்து 8 மில்லியன் ரூபாவில் 90` x 25` விஸ்தீரணம் கொண்ட பாடசாலைக் கட்டடம் ஒன்று கிடைக்கப்பெற்று, அதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு 14.07.2017 அன்று நடைபெற்றது. இதில் யாழ் மாவட்ட வடக்கு மாகாணசபை உறுப்பினர் கௌரவ என் விந்தன் கனகரட்ணம் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தார். தீவக மறைக்கோட்ட குருமுதல்வரும் மண்டைதீவு அல்லைப்பிட்டி பங்குத் தந்தையுமாகிய அருட்பணி மனுவேற்பிள்ளை டேவிட் அடிகளாரின் இறையாசீருடன் இந் நிகழ்வு நடைபெற்றது. இதில் சமாதான நீதவான் திருமதி கி. அமிர்தநாதர், அதிபர் , ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சபை உறுப்பினர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், சமூக அமைப்பிக்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

**எமது ஆசிரியர் வளம்**

எமது பாடசாலை தற்பொழுது தரம் 01 தொடக்கம் தரம் 06 வரையான வகுப்புக்களில் 115 மாணவர்களைக் கொண்டதாகும். இவர்களில் 57 மாணவர்களும், 58 மாணவிகளும் அடங்குவர். தற்பொழுது பாடசாலையில் 12 ஆசிரியர்கள் சேவையில் ஈடுபடுகின்றனர். சங்கீதம், நடனம், றோமன் கத்தோலிக்கம் ஆகிய பாடங்களுக்கு ஆசிர்யர்கள் தேவையாக உள்ளனர்.

01. திரு. அ. யோன் கொலின் அதிபர்
02. திரு. க. சண்முகநாதன்
03. திருமதி க. வசீகரன்
04. திருமதி சே. றோஸ்மலர்
05. திருமதி த. இந்துவாணி
06. திருமதி ஆ. அன்ரனி ஜெயறாஜ்
07. செல்வி சி. எழில் ஓவியம்
08. திரு. க. சிவன்சேய்
09. திரு. கோ. ராகுல்றாஜ்
10. செல்வி ஏ. டேவிகா
11. திருமதி ஜெ. சிவகுமார்
12. திருமதி ச. இரவீந்திரராசா

**தேவையான வளங்கள்**

பல்வேறு துறைகளில் பாரிய வளர்ச்சி கண்டு கொண்டிருக்கும் பெரியளவு பௌதீக வளங்கள் அற்ற இந்தப் பாடசாலையில் இம் மாணவர்கள் இந்தளவு சாதனைகள் படைத்தவர்கள் என்றால், தேவையான அளவு வளங்கள் கிடைக்குமாக இருந்தால் இன்னும் அதிகமான சாதனைகள் எதிர்காலத்தில் புரிவார்கள். எனவே எமக்குத் தேவையான அவசர தேவைகளை இங்கே குறிப்பிடுகின்றேன்.

- பழைய பாடசாலைக் கட்டடத்தில் உள்ள வகுப்பறைக ளுக்கு மின் விசிறிகள் பொருத்துவதுடன், பாதுகாப்பு நெற் அடித்தல் - ரூபா 50,000.00
- பாடசாலை மதிலுக்கு கேற் அமைத்தல் - ரூபா 75,000.00
- மீதமுள்ள பாட்சாலை வேலிக்கு கொங்கிறீற் தூண், வயர் நெற் அடித்தல். (130 அடி) - ரூபா 100,000.00

- ✎ பாடசாலை வளவினுள் மழைநீர் தேங்கி நிற்பதனால் மண்போட்டு நிரவுதல். ( 25 டிப்பர் X 3000.00) - ரூபா 75,000.00
- ✎ புதிய பாடசாலை வளவினுள் நிழல் தரும் மரங்கள் நடுதல். அதற்கான பாதுகாப்பு கூடு அமைத்தல். ( 20 மரங்கள்) - ரூபா 40,000.00
- ✎ மாணவர்களுக்கான விளையாட்டு மைதானம் ஒன்றினை உருவாக்குதல்.
- ✎ பழைய பாடசாலைக் கட்டத்திற்கும் சுற்று மதிலுக்கும் வர்ணம் தீட்டுதல் - ரூபா 100,000.00

**சமய செயற்பாடுகள்**

வருடந்தோறும் தைப்பொங்கல், ஆடிப்பிறப்பு, சரஸ்வதி பூசை, ஒளிவிழா போன்ற விழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப் படுகின்றன. மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமைகளில் புனித பேதுருவானவர் ஆலயத்தில் திருப்பலியும் இடம்பெறுகின்றது.

**சுகாதார செயற்பாடுகள்**

ஒவ்வொரு வருடமும் பொது சுகாதார பரிசோதகர் பாடசாலைக்கு வருகை தந்து மாணவர்களின் சுத்தம் மற்றும் பாடசாலைச் சுத்தம் அவதானிக்கப்படுவதுடன் வைத்தியர்கள் வருகை தந்து மாணவர்களைப் பரிசோதிக்கின்றனர். மருத்துவக் குறைபாடுள்ள மாணவர்கள் வைத்தியசாலைக்கு அனுப்பப்படுவர்.

**மதிய உணவு**

உலக உணவுத் திட்டத்தின் மூலம் தொடர்ந்து போசாக்கான உணவு வழங்கப்படுகின்றது. மதிய உணவு வழங்கலில் உணவு சமைப்பதற்கு உதவும் தொண்டர்களுக்கும், உணவுத் திட்டத்திற்கு

சமூக விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில்
மாகாண மட்டத்திற்கு தெரிவான செல்வி அ. சானுஜா
அதிபர், பொறுப்பாசிரியருடன்



60M,100 M ஓட்டப் போட்டியில் மாகாண மட்டத்திற்கு
தெரிவான செல்வி அ. ஆன் அனுஸ்ரிகா
அதிபர், பொறுப்பாசிரியருடன்



## புலமைப்பரிசில் சாதனையாளர்கள்
## கௌரவிப்பு 2016
## கௌரவிக்கப்படும் பாடசாலை அதிபர்




## புலமைப்பரிசில் சாதனையாளர்கள்
## கௌரவிப்பு 2016
## கௌரவிக்கப்படும் வகுப்பாசிரியர்



யா/ மண்டைதீவு றோ.க. வித்தியாலய

பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாகக் குழு 2017



யா/ மண்டைதீவு றோ.க. வித்தியாலயம்
கணித ஒலிம்பியாட் போட்டியில் மாகாண மட்டத்திற்கு தெரிவானோர்



சிறந்த ஆசிரியருக்கான 'ஆசிரியர் பிரதிபா பிரபா' விருது பெறும்
யா/ மண்டைதீவு றோ.க. வித்தியாலய ஆசிரியர்
திருமதி கபிலராணி வசீகரன்



## யா/ மண்டைதீவு றோ.க. வித்தியாலயத்தின் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவின் போது...






உதவும் உத்தியோகத்தர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின் றேன்.

### பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

இச் சங்கமும் பாடசாலை அபிவிருத்திக்குத் தேவையான பங்களிப்பினைச் வழங்கி வருகின்றது. இது பரிசளிப்பு விழா, இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு, ஆசிரியர் தினம், மாணவர்கள் கௌரவிப்பு, பாடசாலை சிரமதானம் போன்ற நிகழ்வுகளுக்கு தமது பங்களிப்பினை வழங்கி வருகின்றது. இந்த ஆண்டு அபிவிருத்திச் சங்க தலைவராக பாடசாலை அதிபரும், செயலாளராக திருமதி வி. இரட்ணராணி அவர்களும், பொருளாளராக ஆசிரியர் திருமதி கபிலராணி வசீகரன் அவர்களும் தெரிவு செய்யப்பட்டு, சங்கமானது தனது பணிகளைச் செவ்வனே செய்து வருகின்றது.

### பெற்றோர் பங்களிப்பு

பாடசாலை அபிவிருத்தியிலும், மாணவர் கல்வி வளர்ச்சி யிலும் பெற்றோரின் பங்கு அளப்பரியதாகும். பெற்றோர்களின் அக்கறையாலும், செயற்பாடுகளினாலும் கல்வி அபிவிருத்தியில் பெரும் முன்னேற்றம் காணமுடிகின்றது. மாணவர்களின் பரீட்சை முடிவுகள், நன்நடத்தைகள், வரவொழுங்கு தொடர்பாகப் பெற்றோர் சந்திப்புக்களும், கூட்டங்களும் நடாத்தப்படுகின்றன. பெற்றோர் பாடசாலை நிகழ்வுகளிலும், சிரமதானச் செயற்பாடுகளிலும் தம்மாலான பங்களிப்பை வழங்குகின்றனர். பாடசாலையில் அக்கறை கொண்டு பெருமளவில் பங்களிப்பைச் செய்து வரும் அனைத்துப் பெற்றோர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## எமது நன்றிக்குரியவர்கள்

- வருடாந்த பரிசளிப்பு விழாவினைச் சிறப்புற நடாத்துவதற்கு முழுமையாக உதவிபுரிந்த புனித பேதுருவானவர் கல்விக் குழுவினருக்கும்
- வருடாந்த பரிசளிப்பு விழாவினைச் சிறப்புற நடாத்துவதற்கு ரூபா 25000.00 வழங்கிய பெயர் குறிப்பிட விரும்பாத அவுஸ்ரேலியா வாழ் பழைய மாணவருக்கும்
- மேலும் கடந்த காலங்களில் பாடசாலை வளர்ச்சிக்காக பொருள், பணம் அடிப்படையில் அன்பளிப்புச் செய்த நல் உள்ளங்கள் அனைவருக்கும்
- 2015ஆம் ஆண்டில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் இருந்து ரூபா 50000.00மும், (எமது பாடசாலைக்கான அம்பிலி வயர் செற் கொள்வனவு செய்யப்பட்டது.) 2016 ஆம் ஆண்டில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் இருந்து ரூபா 50000.00 மும் எமது பாடசாலை வகுப்பறைகளுக்குத் தேவையான 4 அலுமாரிகள் கொள்வனவு (6`x3`)வழங்கிய கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திரு.சிறிதரன் அவர்களுக்கும்
- 2017 ஆம் ஆண்டிற்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதி ஒதுக்கீட்டுத் திட்டத்தின் கீழ் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட தரம் - 06 வகுப்பறைக்கான தளபாடக் கொள்வனவுக்காக ரூபா 200000.00 (இரண்டு இலட்சம்) வழங்கிய யாழ் மாவட்ட வடக்கு மாகாணசபை உறுப்பினர் கௌர என். விந்தன் கனகரட்ணம் அவர்களுக்கும்
- விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவுக்காக ரூபா 25000.00 (இருபத்து ஐந்து ஆயிரம்) வழங்கிய அவுஸ்திரேலியாவில் இருந்து வருகை தந்திருந்த பாடசா

லையின் பழைய மாணவன் திரு. யேசுநாயகம் அருள்ராஜ் அவர்களுக்கும்

- 2013ஆம் ஆண்டில் இருந்து தொடர்ச்சியாக ஒவ்வொரு வருடமும் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்று வெற்றிபெறும் ஒவ்வொரு மாணவர்களுக்கும் தலா 5000.00 (ஐயாயிரம்) வழங்கிவரும் திரு.தேவசகாயம்பிள்ளை ஜெகநாதன் (கனடா) அவர்களுக்கும்
- 2013ஆம் ஆண்டில் இருந்து தொடர்ச்சியாக ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு வகுப்பிலும் முதல்நிலை பெறும் 03 மாணவர்களுக்கும் தலா 1000.00 (ஆயிரம்) வீதம் அன்பளிப்புச் செய்துவரும் தேவதாசன் அருள்தாஸ் (கனடா) அவர்களுக்கும்
- பாடசாலை மதில் அமைப்பதற்கு (கேற் உட்பட) ரூபா 60000.00 (அறுபதாயிரம்) வழங்கிய பாடசாலையின் ஓய்வுநிலை ஆசிரியர் திருமதி தேவசகாயம்பிள்ளை அகத்தம்மா (கனடா) அவர்களுக்கும்
- போட்டோ பிரதிகள் இயந்திரம் கொள்வனவுக்காக ரூபா 125,000.00 ( ஒரு இலட்சத்து இருபத்து ஐயாயிரம்) வழங்கிய திரு. தேவசகாயம்பிள்ளை ஜெகநாதன் (கனடா) அவர்களுக்கும்
- பான்ட் செற் (Band Set) கொள்வனவுக்காக ரூபா 75,000.00 (எழுபத்து ஐயாயிரம்) அன்பளிப்புச் செய்த திரு. தேவதாசன் குகநாதன் (அவுஸ்திரேலியா) அவர்களுக்கும்
- கணனி அன்பளிப்புச் செய்த திரு. சின்ராசா அந்தோனிப் பர்னாந்து அவர்களுக்கும்
- பாடசாலைக் கட்டட புனரமைப்புப் பணிக்காக (40'x20') ரூபா 150,000.00 (ஒரு இலட்சத்து ஐம்பது ஆயிரம்) அன்பளிப்புச்

செய்த திரு. கீதபொன்கலன் தனபாலன், திரு.சந்தியாப் பிள்ளை நோபேட் உட்ளிட்ட லண்டன் வாழ் குழுவினருக்கும்

- அதே கட்டடப் புனரமைப்புக்காக ரூபா 100,000.00 (ஒரு இலட்சம்) அன்பளிப்புச் செய்த புனித பேதுருவானவர் கடற்றொழிலாளர் சங்கத்திற்கும்
- குடிநீர் விநியோக குழாய் பொருத்துதலுக்காக ரூபா 25,000.00 (இருபத்து ஐயாயிரம்) அன்பளிப்பு செய்த திரு. செபஸ்ரியாம்பிள்ளை அறிவழகன் (லண்டன்) அவர்களுக் கும்
- நீர் விநியோக குழாய் விஸ்தரிப்புக்காக ரூபா 15,000.00 (பதினைது ஆயிரம்) அன்பளிப்புச் செய்த திரு. செபஸ்ரீன் எட்மன் அவர்களுக்கும்
- பாடசாலை வேலிக்கு வயர் நெற் அடித்து உதவிய (60அடி ) திரு. கீதபொன்கலன் தனபால் அவர்களுக்கும்
- ரூபா 10,000.00 (பத்து ஆயிரம்) அன்பளிப்புச் செய்த திரு.திருமதி சாள்ஸ் எட்வீனம்மா குடும்பத்தினருக்கும்
- புதிய பாடசாலை அமையவுள்ள காணியிலுள்ள பனை மரங்கள் தறிக்கப்பட்டு, அவற்றினை அகற்றுவதற்று உதவிசெய்ததோடு, பாடசாலையின் சில பகுதிகள் தகரத்தால் வேலி அமைக்கப்பட்டு,தற்காலிகமாக ஆசிரியர் ஓய்வறைக் கான ஒரு பகுதியையும் வழங்கி, அதற்கான மின்விசிறி வசதிகள் செய்து, ஆசிரியர்களின் பாவனைக்கு வழங்கிய புனித பேதுருவானவர் ஆலய பங்குத்தந்தை அருட்பணி மனுவேற்பிள்ளை டேவிற் அவர்களுக்கும், ஆலய அருட்பணி சபையினருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

குறிப்பாக பாடசாலை செயற்பாடுகள் யாவற்றையும் மேற்கொள்ள அனுமதியும் உதவியும் வழங்கிய வலயக் கல்விப்

பணிப்பாளர் அவர்களுக்கும், வலயக் கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள், மாகாண கல்விப் பணிப்பாளர், மாகாண கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர், கோட்டக் கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின் றேன்.

இவற்றிற்கும் மேலாக எமது அழைப்பை ஏற்று வருகை தந்து பிரதம விருந்தினராகக் கலந்து விழாவைச் சிறப்பித்துக் கொண்டிருக்கும் யாழ். மாவட்ட வட மாகாணசபை பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ என். விந்தன் கனகரட்ணம் அவர்களுக்கு எனது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பாடசாலை செயற்பாடுகளில் என்னுடன் பக்கபலமாக இருந்து சிறப்புறப் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும், பாடசாலை அபி விருத்திச் சங்கச் செயலாளர் அவர்களுக்கும், நிர்வாகசபை உறுப்பினர்களுக்கும், எமது பாடசாலை வளர்ச்சிக்காக நல்லாசி களை வேண்டி, நல் ஆலோசனைகள் வழங்கி எம்மை வழிப்படுத்தும் பங்குத் தந்தை அருட்பணி மனுவேற்பிள்ளை டேவிட் அவர்களுக்கும், வெளிநாடுகளில் இருந்தும் உள்நாடுகளில் இருந்தும் பல்வேறு உதவிகளைச் செய்து வருகின்ற உடன் பிறப்புக்களுக்கும், ஒத்துழைப்புடன் செயற்பட்டு வரும் பெற்றோர்க ளுக்கும், மாணவர்களுக்கும்,பாடசாலைச் சமூகத்தினருக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்து அறிக்கையை நிறைவு செய்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

நன்றி.

திரு. யோன் கொலின்,
அதிபர், யா/ மண்டைதீவு றோ.க. வித்தியாலயம்.

## பரிசு பெறுவோர் விபரம்

### வகுப்பு ரீதியில் முதல்நிலை மாணவர் விபரம்

| மாணவர் பெயர் | தரம் | நிலை |
|---|---|---|
| ஜோ. ஆன் சரோலின் | 01 | 01 |
| தோ. மிதுர்ஷா | 01 | 02 |
| ஜெ. தீபிகா | 01 | 03 |
| ம. டிபோன்சன் | 02 | 01 |
| சே. மேரி அன்ரனிற்றா | 02 | 02 |
| றொ. றொமில்டா | 02 | 03 |
| த. கபிலன் | 03 | 01 |
| சூ. கலையினி | 03 | 02 |
| க. யேசுபாலன் | 03 | 03 |
| சே. அன்பழகன் | 04 | 01 |
| வி. அமுதகென்றி | 04 | 02 |
| அ. அஞ்சிநிலவன் | 04 | 03 |
| அ. சாணுஜா | 05 | 01 |
| அ. ஆன் பிறின்டா | 05 | 02 |
| டா. போல் பிரசாத் | 05 | 03 |

## மாணவர் வரவு

| மாணவர் பெயர் | தரம் |
|---|---|
| தோ. மிதுஷா | 01 |
| அ. அருள்றாஜ் | 02 |
| த. கபிலன் | 03 |
| யோ. மேரி ஜெசில்டா | 03 |
| அ. அருணா | 04 |
| ச. ஆதித்தியா | 05 |
| இ. செறினா | 05 |
| ச. டொனிசியா | 05 |

## இணைப் பாடவிதான செயற்பாடு பரிசில் பெறுவோர்

| ஆண்டு | தரம் | மாணவர் பெயர் | விடயம் | அடைவு |
|---|---|---|---|---|
| 2017 | 06 | அ. சாணுஜா | சமூக விஞ்ஞானம் | மாகாண தெரிவு |
| | | அ. சாணுஜா (குழு)<br>ட. டனிசியா (குழு)<br>பீ. பிரதாப் (குழு)<br>ஸ். விமர்ஷா (குழு)<br>டா. போல் பிரசாத் (குழு)<br>மெ.டிலைக்ஷினி (குழு)<br>சூ. சர்மிகா (குழு) | கணித ஒலிம்பியாட் | கோட்டம் - 1<br>வலயம் - 2 |
| | 02 | சே. மேரி அன்ரனிற்ரா | விரைவு கணிதம் | கோட்டம் - 1<br>வலயம் - 2 |
| | 04 | க. இயேசுபாலன் | விரைவு கணிதம் | கோட்டம் - 2 |
| | | அ. சாணுஜா | ஆக்கத்திறன் வெளிப்பாடு | கோட்டம் - 1<br>வலயம் - 2 |

## இணைப் பாடவிதான செயற்பாடு பரிசில் பெறுவோர்

| ஆண்டு | தரம் | மாணவர் பெயர் | விடயம் | அடைவு |
|---|---|---|---|---|
| 2016 | 05 | அ. சாஹுஜா (குழு)<br>அ. ஆன் பிறிண்டா (குழு)<br>பீ. பிரதாப் (குழு)<br>அ. ஆகாஷ் (குழு)<br>கொ. டிஷாந்தனி (குழு) | பொது அறிவுப் போட்டி | கோட்டம் - 1 |
| | | அ. அபிஷன் (குழு)<br>அ. ஆகாஷ் (குழு)<br>அ. அன்ரனி (குழு)<br>கொ. டிஷாந்தன் (குழு)<br>ஸ். தனுஸ்லாஸ் (குழு)<br>டா. போல் பிரசாத் (குழு)<br>பீ. பிரதாப் (குழு)<br>அ. அன்ரனி றிசோன் (குழு) | செயற்பட்டு மகிழ்வோம் | கோட்டம் - 1<br>வலயம் - 3 |

## இணைப் பாடவிதான செயற்பாடு பரிசில் பெறுவோர்


| ஆண்டு | தரம் | மாணவர் பெயர் | விடயம் | அடைவு |
| --- | --- | --- | --- | --- |
| 2016 | | அ.ஆன் அனுஸ்ரிகா (குழு)<br>ச. ஆதித்தியா (குழு)<br>சூ. சர்மிகா (குழு)<br>ஸ் விமர்ஷா (குழு)<br>வி. மதுஷனா (குழு)<br>அ. ஆன் பிறிண்டர் (குழு)<br>மெ. டிலைக்ஷினி (குழு) | செயற்பட்டு மகிழ்வோம் | கோட்டம் - 1<br>வலயம் - 2 |
| | | அ. ஆன் பிறிண்டா | துரித கணிதம் | கோட்டம் - 2 |
| | 04 | வி. அமுத கென்றி (குழு)<br>அ. அஞ்சிநிலவன் (குழு)<br>சே. அன்பழகன் (குழு)<br>அ. அருளரசன் (குழு)<br>பீ. துரைவீரன் (குழு)<br>எ. அபிஷர் (குழு) | செயற்பட்டு மகிழ்வோம் | வலயம் - 2 |

## இணைப் பாடவிதான செயற்பாடு பரிசில் பெறுவோர்

| ஆண்டு | தரம் | மாணவர் பெயர் | விடயம் | அடைவு |
|---|---|---|---|---|
| 2016 | 04 | றொ. றொக்சியா (குழு)<br>றெ. கம்ஷா (குழு)<br>அ. வினோஜா (குழு)<br>ஜெ. துசிதா (குழு)<br>க. ஜதுசன் (குழு) | செயற்பட்டு மகிழ்வோம் | வலயம் - 2 |
| | 02 | சே. மேரி அன்ரனிற்ரா | துரித கணிதம் | கோட்டம் - 1<br>வலயம் - 2 |
| | | றொ. றொமில்டா | சித்திரப் போட்டி | கோட்டம் - 1 |
| | | செ. மேரி அன்ரனிற்ரா | திருக்குறள் | கோட்டம் - 1 |
| | 03 | அ. அனுஸ்ரன் (குழு)<br>வி. வினுஷன் (குழு)<br>றொ. றொபின்சன் (குழு)<br>க. ஜேசுபாலன் (குழு)<br>றொ. ரசில்டா (குழு) | செயற்பட்டு மகிழ்வோம் | கோட்டம் - 3 |

# இணைப் பாடவிதான செயற்பாடு பரிசில் பெறுவோர்

| ஆண்டு | தரம் | மாணவர் பெயர் | விடயம் | அடைவு |
|---|---|---|---|---|
| 2016 | 03 | அ. தீப்பிக்கா (குழு)<br>பீ. பிரியா (குழு)<br>சூ. கலையினி (குழு)<br>அ. அனுசியா (குழு)<br>யா. சுஜீபா (குழு)<br>த. கபிலன்(குழு) | செயற்பட்டு மகிழ்வோம் | கோட்டம 3 |



# English Day Competition

| ஆண்டு | தரம் | மாணவர் பெயர் | விடயம் | அடைவு |
|---|---|---|---|---|
| 2017 | 03 | ம். டிபோன்சன் | ஆங்கில கவிதை | கோட்டம் - 2 |
| | | சு. கபிலன் | ஆங்கில வாசிப்பு | கோட்டம் - 2 |
| | 04 | அ. தீப்பிக்கா | ஆங்கில கவிதை | கோட்டம் - 2 |
| | 05 | வி. அமுதகென்றி | ஆங்கில எழுத்து | கோட்டம் - 2 |
| | 06 | இ. ஆஸ்லிலீடியா | ஆங்கில வாசிப்பு | கோட்டம் - 3 |
| 2017 | 06 | இ. ஆஸ்லிலீடியா | ஆங்கில வாசிப்பு | கோட்டம் - 3 |
| | 06 | இ. ஆஸ்லிலீடியா | ஆங்கில வாசிப்பு | கோட்டம் - 3 |

| தரம் | மாணவர் பெயர் | பிரிவு | விடயம் | அடைவு |
|---|---|---|---|---|
| 06 | அ. அனுஸ்ரிகா | 12 | 60M, 100M | மாகாணத் தெரிவு |
| | அஞ்சலோட்ட அணி ஆண்<br>அ. ஆகாஷ்<br>வி. அமுதகென்றி<br>கொ. டிஷாந்தன்<br>அ. அன்ரனி<br>டா. போல் பிரசாத்<br>பீ. பிரதாப் | 12 | 4x50M | மாகாணத் தெரிவு |
| | அஞ்சலோட்ட அணி பெண்<br>அ. ஆன் அனுஸ்ரிகா<br>வி. மதுஷனா<br>ச. ஆதித்தியா<br>சூ. சாமிக்கா<br>ஸ் விமர்ஷா<br>மெ. டிலைக்சினி | 12 | 4x50M | மாகாணத் தெரிவு |

## புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள் 2012 - 2016

2012



அ. கீர்த்தனா - 157

2013



க. கனிஸ்ரெலா - 170

2013



ஆன்பியறினா - 170

2013



பிரியா - 159

2014



ஜோ. டிலைக்சனா - 162

2014



க.டினோசா - 170

2014



இ. ராஜ்குமார் - 155

2014



ஜோ. தினோஜ் - 154

## புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள் 2012 - 2016

2014



நி. தனுசியா - 153

2015



த. கமில்ரன் - 162

2015



தோ. சதுஷன் - 161

2015



அ. பிரதாப் - 159

2016



அ. ஆன் பிரின்டா - 164

2016



கி. அபிஷன் - 158

## புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள் விபரம்
## 2012 – 2016

| ஆண்டு | தோற்றிய மாணவர்கள் தொகை | எழுபது புள்ளிகளுக்கு மேல் சித்தி பெற்றவர் எண்ணிக்கை | வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் வெற்றி பெற்றோர் | சித்தி வீதம் |
|---|---|---|---|---|
| 2012 | 17 | 12 | 01 | 70 வீதம் |
| 2013 | 16 | 16 | 03 | 100 வீதம் |
| 2014 | 21 | 19 | 05 | 90 வீதம் |
| 2015 | 13 | 13 | 03 | 100 வீதம் |
| 2016 | 24 | 23 | 02 | 96 வீதம் |

## 2016 புலமைப் பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்த மாணவர்கள் விபரம்

| இல. | மாணவர்கள் பெயர் | புள்ளிகள் |
|---|---|---|
| 01 | டா. போல் பிரசாத் | 140 |
| 02 | அ. அன்ரனி றிசோன் | 87 |
| 03 | ஸ். தனுஸ்லாஸ் | 128 |
| 04 | கி. அபிஷன் | 158 |
| 05 | பீ. பிரதாப் | 142 |
| 06 | அ. ஆகாஷ் | 127 |
| 07 | கொ. டிஷாந்தினி | 132 |
| 08 | அ. அன்ரனி | 77 |
| 09 | அ. சாணுஜா | 151 |
| 10 | அ. ஆன்பிறின்ரா | 164 |
| 11 | ஸ் விமர்ஷா | 148 |
| 12 | சூ. சர்மிகா | 126 |
| 13 | அ. ஆன் அனுஸ்ரிகா | 108 |
| 14 | ச. ஆதித்தியா | 125 |
| 15 | கி. அமிர்தராணி | 101 |
| 16 | பீ. செறினா | 94 |
| 17 | மெ. டிலைக்சினி | 142 |
| 18 | ட. டனிசியா | 104 |
| 19 | ச. டொனிசியா | 75 |
| 20 | ர. டிலைக்சினி | 91 |
| 21 | ட. டிஷாந்தினி | 77 |
| 22 | வி. மதுஷனா | 87 |
| 23 | இ. ஆசிலிலீடியா | 112 |



# அமரர் லோறன்ஸ் அலெக்சாண்டர்


*"குறைவாக விதைப்பவர் குறைவாக அறுவடை செய்வர்.*
*நிறைவாக விதைப்பவர் நிறைவாக அறுவடை செய்வர்"*

2 கொரி 9 : 6

இந்தப் பரிசளிப்பு மலர் வெளியீட்டுக்கு அனுசரணை செய்யுமாறு அமரர் அலெக்சாண்டர் குடும்பத்தினரைக் கேட்டிருந்த போது, எதுவித மறுப்புமின்றி உடனடியாக இந்த மலர் வெளியிட்டுக்கான முழுத் தொகையினையும் தந்து உதவி இந்தப் பாடசாலையின் பெறுமதி மிக்க வரலாற்று ஆவணத்துக்கு அனுசரணை செய்திருக்கின்றார்கள். அமரர் அலெக்சாண்டர் வாழ்ந்த காலத்தில் எம் மக்களிற்கும், எம் கிராமத்திற்கும் பல உதவிகளைச் செய்தார். அமரரின் பணியை மனைவி பிள்ளைகள் தொடர்வது பாராட்டப்பட வேண்டியதாகும்.

*"ஒருவர் ஏழைகளுக்கு வாரி வழங்கும் போது*
*அவரது நீதி என்றும் நிலைத்து நிற்கும்."* 2 கொரி 9 : 9

இறையாசீர்கள்
பங்குத்தந்தை.




AR அச்சகம். மண்டைதீவு. T.P: 077 815 224